தேவனுடைய ஆவியானது
எப்பொழுதும் சீர்த்திருத்தலை
ஏற்றுக்கொள்ளும்படியாக, அது
இனிமையாகவும், தாழ்மையாகவும்,
விருப்பமுள்ளதாகவும் இருக்கும்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

### செய்தி: இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்

THRONE OF MERCY AND JUDGEMENT

ஜனவரி 8, 1961 பிரான்ஹாம் கூடாரம் இந்தியானா, அமெரிக்கா

12. நான் ஒரு எஜமானனின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முயலுவதாகத் தோன்றுமானால், என்னை மன்னியுங்கள். நான் எஜமானன் அல்ல. பவுல் ஒரு சமயம் தனது சபையாரைப் பார்த்து, “நீங்கள் என் கிரீடத்தில் உள்ள நட்சத்திரங்கள்” என்று கூறினானே,

அதைப் போலவே நானும் உங்களிடம் கூறும்படியான எண்ணம் வருகிறது. அக்கரையில் இருக்கும் அப்பரம தேசத்திற்கு நான் கடந்து சென்று, உங்களை அந்த மகிமைப்பட்ட நிலையில் நான் சந்திக்கையில், நீங்கள் அங்கே நட்சத்திரங்களாக பிரகாசிக்க வேண்டுமென நான் வாஞ்சிக்கிறேன், பாருங்கள்? நீங்கள் அங்கே இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். நான் அங்கே இருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

13. கர்த்தருடைய பிரசன்னத்தை, அல்லது அவருடைய ஜனங்களை அக்கரையிலுள்ள மகிமையான தேசத்தில், என் தரிசனத்தில் கண்டதை நான் நினைவுகூருகிறேன். நான் சுற்று முற்றும் பார்த்து, அவர்களிடம் கூறினேன்.... அவர்கள் என்னிடம் நான் சுவிசேஷத்தை எவ்வாறு பிரசங்கித்தேனோ, அதன்படியே முதலாவதாக நியாயந்தீர்க்கப்படுவேன் என்று கூறினார்கள்.... 'பவுல் எவ்விதமாக அதை பிரசங்கித்தானோ

அதேவிதமாகத்தான் நானும் பிரசங்கித்தேன்” நான் கூறினேன்.

14. அந்த இலட்சக்கணக்கான மக்கள் அங்கே நாங்கள் அதின் பேரில்தான் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம்” என்று ஆர்ப்பரித்தார்கள். பாருங்கள்? அது அவ்வண்ணமாகவே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஒரு நாளில் நாம் அங்கே சந்திக்கப்போகிறோம்.

15. தேவன் என்னையும் சகோதரர் நெவிலையும் எஜமானர்களாக இருக்க வேண்டுமென்று அனுப்பவில்லை.

அப்படி இல்லவே இல்லை. நாங்கள் உங்களுடைய சகோதரர்கள் மாத்திரமே என்பதை நீங்கள் பாருங்கள். நாங்கள் சுவிசேஷத்தை போதிக்கிறவர்கள் மாத்திரமே. ஆகவே நாம் யாவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்.

16. சில சமயங்களில், ஒரு நபர் பெற்றிருக்கிற வரமானது கிரியை செய்யும் விதத்தைக் குறித்து அதை ஒழுங்குபடுத்தும்படி அதைப்பற்றி ஏதாவது கூறவோ, கடிந்துகொள்ளவோ செய்யும் பொழுது, அவ்வரத்தைப் பெற்றிருக்கும்

அந்நபர் அதை ஏற்றுக் கொள்ளாமல், அதை நிராகரித்தால், அவ்வரம் சரியான ஒன்றல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். முதலாவதாக, அது தேவனிடத்திலிருந்து வந்ததே அல்ல. தேவனுடைய ஆவியானது எப்பொழுதும் சீர்த்திருத்தலை ஏற்றுக்கொள்ளும்படியாக, அது இனிமையாகவும், தாழ்மையாகவும், விருப்பமுள்ளதாகவும் இருக்கும். பாருங்கள்? ஆனால் அதற்கு மாறாக, சீர்திருத்தல் வரும்போது எழுந்து நின்று, "நான் எப்படி

**வேண்டுமானாலும் செய்துகொள்வேன்" என்று சொன்னால், அவ்விதமான ஆணவத் தன்மையுள்ள ஆவிகள், தேவனிடத்திலிருந்து வந்ததல்ல.** பாருங்கள்?

எனவே, பூமி முழுவதும் தேவனுடைய மகிமையால் நிரம்பியிருக்கையில், தேவனுடைய உண்மையான வல்லமையால் நிரம்பியிருக்கையில், ஏன் போலியைத் தெரிந்து கொள்ள வேண்டும்? நாம் ஏன் ஒரு போலியை தெரிந்து கொள்ளப் போகிறோம்?

இப்பொழுது இந்த நாளில் நாம் மிகவும் தாமதமாக இருந்து கொண்டிருக்கிறோம், ஆனால் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்; என்னவெனில், வஞ்சிக்கிறவன், எவ்வளவு சூதும் வஞ்சகமுமாயிருக்க முடியுமோ, அந்த அளவுக்கு இருந்து, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கப்பார்ப்பான். பாருங்கள்?

17. சில வேளைகளில் நாம் அந்த தெரிந்து கொள்ளப்பட்டவர் களின் கூட்டத்தில் இருக்கிறோம் என்று எண்ணுகிறோம். அதில் நாம்

இருக்கிறோம் என்று நானும் நம்புகிறேன்; ஆனால் நாம் வேதத்தோடு சரியானபடி இருக்கக்கடவோம். அப்பொழுது எல்லாமே வேத வாக்கியங்களின்படியே சரியாக இருக்குமென்றால், தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருமென்றால், சபைக்கு கனத்தை ஏற்படுத்துமென்றால், அப்பொழுது அது தேவனால் உண்டானது என்று அறிகிறோம், ஏனெனில் வேதமும் அது சரியென்று அதை ஆதரிக்கிறது. ஆனால் நமது உபதேசங்கள் அதை சரியென்று கூறாவிடில், அது

நன்மை பயக்காது, அது வீழ்ச்சி யடைந்துவிடும்.

**18.** ஆகவே, நமக்கு ஏதாவது உள்ளத்தில் தோன்றினால், அது எவ்வளவு உண்மைபோல் தோற்றமளித்தாலும், வேதவாக்கியங்களின்படி அது இருக்கவில்லையெனில், அதை உடனடியாக விலக்கிக் கொள்ளுங்கள், ஏனெனில், உண்மையான ஒன்று காத்துக்கொண்டிருக்கிறது, பாருங்கள்.